நிலா காமிக்ஸ்

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்



2


கல்கியின்

# பொன்னியின் செல்வன்

காமிக்ஸ்

நிலா காமிக்ஸ்

www.nilacomics.com


வணக்கம் வாசகர்களே...
வாருங்கள் குருஷேத்திரத்திற்கு இணையான திருப்புறம்பியம் பள்ளிப்படைக்கு நாம் செல்வோம். மூன்று நாள் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றது. ஆனால், யாருக்கு வெற்றி என்று தெரியவில்லை. நான்காம் நாள் யுத்தத்தில் விஜயாலய சோழன் பங்கு பெற போவதாக செய்தி வந்திருக்கிறது. அந்த வீரக் கிழவனின் வீரத்தை காணலாம் வாருங்கள்.



நான்காம் நாள் இரவு
பல்லவர்களின் பாசறையில் சபை கூடுகிறது. அதில் பல்லவ மன்னன் அபராஜிதவர்மன், கங்க நாட்டு மன்னன் பிரிதிவீபதி, சோழ நாட்டு மன்னன் முதலாம் ஆதித்தன் மற்றும் அவனுடைய தந்தை விஜயாலய சோழன் ஆகியோர் கூடி ஆலோசனை செய்கிறார்கள்.


போரின் போக்கை பார்த்தால் நாம் தோற்பது நிச்சயம்! பின்வாங்கி கொள்ளிடத்து வடகரைக்கு சென்று விடுவதுதான் நல்லது. (அபராஜிதவர்மன்)
ஆம்! பல்லவ மன்னன் கூறுவதுதான் சரி. பின்வரும் சந்தர்ப்பத்தில் பார்த்துக் கொள்ளலாம். (பிருதிவீபதி)
நான் கூறுவதை கேளுங்கள்! பின்வாங்க வேண்டிய அவசியமே இல்லை. (விஜயாலய சோழன்)
தந்தையே, தாங்கள் சூழ்நிலை அறியாமல் பேசுகிறீர்கள். (முதலாம் ஆதித்தன்)


சூழ்நிலையை அறிந்துதான் நான் பேசுகிறேன் மகனே. நான் சொல்வதை கேளுங்கள், உடனே எனக்கு ஒரு யானையை கொண்டு வாருங்கள்.
யானை படை முற்றிலுமாக அழிந்துவிட்டது அரசே...
என்ன சொன்னீர், யானை படை அழிந்துவிட்டதா!
அப்படியென்றால் ஒரு குதிரையேனும் கொண்டு வாரும்.
அதையும் முற்றிலும் அழித்துவிட்டார்கள்.
ஆ... சோழநாட்டு சுத்த வீரர்கள் யாரேனும் இருவர் உயிரோடு மிஞ்சி இருக்கிறீர்களா? இருந்தால் வாருங்கள்... (என்று கர்ஜித்தார்)
இப்படி கர்ஜிக்கும் இந்த கிழவனின் வயது தொன்னூறு. அது மட்டுமில்லை ஏற்கனவே நடந்த போரில் ஏற்பட்ட கொடிய காயத்தால் தன் கால்கள் இரண்டையும் இழந்தவர்.


இருவருக்கு பதிலாக இருநூறு சோழவீரர்கள் வந்து நிற்கிறார்கள்.
இரண்டு இரண்டு பேராக வரிசையாக நில்லுங்கள்.


என்னை சுமக்கும் இருவர் விழுந்தால் பின்னால் வரும் இருவர் என்னை தூக்கிக் கொள்ள வேண்டும். புரிந்ததா....? புறப்படுங்கள்!


விஜயாலய சோழன் அவ்வீரர்களின் தோள்களின் மீது அமர்ந்து இரு நீண்ட வாள்களை ஏந்தி சுழற்றிக் கொண்டே, போர் களத்திற்குள் நுழைகிறான்.


அந்த பெரும் படைக்குள்ளே
செல்லுங்கள்.


விஜயாலய சோழனின் வாள் திருமாலின் சக்கரம் போல் சுழல்கிறது.


எதிரியின் தலைகள் உருளுகின்றன.


எங்கே பாண்டியர்கள்?
எங்கே அந்த மறவர்கள்?
எந்த படையாலும் விஜயாலய சோழனை தடுத்து நிறுத்த முடியவில்லை.


அதை கண்ட பல்லவ படையும், வீறுகொண்டு எழுந்து பாண்டியர்களின் படையை தாக்கின.
வாருங்கள், நாமும் விஜயாலயருடன் சேர்ந்து பாண்டியர்களை பூண்டோடு அழித்துவிடுவோம்.


பாண்டிய படை தோற்று சிதறி ஓடியது.


இப்போரில் பிறிதிவீபதி வீர சொர்க்கம் அடைகிறான்.


அவனுக்கு களத்தில் வீரக்கல் நாட்டி பள்ளிப்படை கோயில் எடுத்தார்கள்.


இப்போரின் வெற்றியின் மூலமே சோழர்கள் பிற்கால சோழ சாம்ராஜ்யத்தை நிறுவினார்கள்.


அத்தகைய ரணகள பூமிக்குத்தான் ஆழ்வார்க்கடியான் வந்திருக்கிறான். ஏன்? என்பதை அருகில் சென்று தெரிந்து கொள்வோம் வாருங்கள்!
என்ன இது! இரவு மூன்று நாழிகை ஆகிவிட்டதே, இன்னும் யாரும் இங்கு வரவில்லையே!


ஒருவேளை திட்டத்தை வேறு இடத்துக்கு மாற்றி விட்டார்களோ! ம்...
அப்போது தூரத்தில் ஒரு வெளிச்சம் தன்னை நோக்கி வருவதை ஆழ்வார்க்கடியான் காண்கிறான்.


யாரோ இருவர் பள்ளிப்படையை நோக்கி வருகிறார்கள்.
திட்டமிட்ட இடத்திற்கு வந்ததும், ஒருவன் தீப்பந்தத்தை உயர்த்தி சுற்றும் முற்றும் பார்க்கிறான். அப்போது மேலும் இருவர் வருகின்றனர்.
நால்வரும் கூடி, அவர்களுக்கு உள்ளேயே ஏதோ பேசிக் கொள்கிறார்கள்.


என்ன பேசுகிறார்கள்?
ஒன்றும் கேட்கவில்லையே...
சற்று நேரத்தில் மேலும் இருவர் வருகிறார்கள். அதில்
ஒருவன், ஆபத்துதவிகளின் தலைவன் ரவிதாசன்.
ரவிதாசன் நடுநாயகமாக நின்று ஏதோ பேசுகிறான்.


ஏதும் கேட்பது போல் தெரியவில்லையே! ம்...
சற்று அருகில் போனால்தான் விவரம் கிடைக்கும்.
டபக்
அந்த சப்தத்தை கேட்டு, அங்கிருந்த ஒருவன்,
யார் அங்கே?
ஆழ்வார்க்கடியானின் இதய துடிப்பு சிறிது நேரம் அப்படியே நின்றுவிட்டது.
அச்சமயத்தில், கோட்டான் ஒன்று வெளிவந்து தன் சப்பட்டையை "படபட" என்று அடித்துக்கொண்டு பறந்தது.
வெட்டுடா அதை! அந்த கோட்டான் நம்மையே பயப்படுத்திவிட்டதே!



வேண்டாம் நிறுத்துங்கள்,
நம்மை போல் இரவில் விழித்திருக்கும் கோட்டான்களும், ஆந்தைகளும் நம் சிநேகிதர்கள், உங்கள் ஆயுதங்களை கூராக்கி வையுங்கள்! நம் எதிரிகளை பழி தீர்ப்பதற்கு...
அதற்குள் ஆழ்வார்க்கடியான், பதுங்கி பதுங்கி சதிகாரர்களின் அருகிலிருந்த, ஒரு பெரிய மருதமரத்தை அடைந்து, மரத்தோடு மரமாக மறைந்து நின்று கொண்டான்.
ஹப்பா! அந்த கோட்டானுக்கு கோடி புண்ணியங்கள்.
அனைவரும் வந்தாகி விட்டதா?


எங்கே சோமன் சாம்பவனும்,
இரும்பன்காரியும்?
இதோ வந்து
விட்டோம்.
அடடா! இந்த பாழும்
உடம்பு வேறு இப்படி
பெருத்துவிட்டதே...
புதிதாக வந்தவர்கள் யார் என்று
பார்க்கிறான் ஆழ்வார்க்கடியான்.
கொள்ளிடக்கரையில்
நான் பார்த்த அதே
நபர்கள்தான்
இவர்கள்.
சோமன் சாம்பவனையும், இரும்பன்காரியையும் கண்ட ரவிதாசன்,
வாருங்கள், ஏன் இவ்வளவு
காலதாமதம்?
வழி நெடுகிலும் சோழ படையினரின் பாதுகாப்பு
பலமாக இருந்ததால், அவர்களின் பார்வையில்
அகப்படாமல் வருவதற்கு காலதாமதம் ஆயிற்று.


சோமன் சாம்பவன் கூறியதைக் கேட்டு,
என்ன சொன்னாய்..? சோழ படையினரின் பலத்த பாதுகாப்பா! ஹா.. ஹா.. ஹா.. ஹ...
என்று ஏளனமாக சிரித்துவிட்டு தன் கையிலிருந்த பொன்முடிப்பை வீசி,
இதோ பாருங்கள்! தஞ்சை கோட்டையின் நிலவறையில் இருந்தே எடுக்கப்பட்ட சோழ நாட்டின் பொற் காசுகள்.
அற்புதம்!
ஆஹா!
அபாரம் ரவிதாசரே!


நாணயங்களை கண்ட சோமன் சாம்பவன்,
ஒரு பக்கம் புலி!
மறு பக்கம் பனை!
ரவிதாசரே, இருப்பினும் தங்களுக்கு நெஞ்சு துணிவு தான்!
ஆம் நண்பர்களே! வேளக்காரப் படையினருக்கு நம் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பது அனைவருக்கும் நினைவிருக்கட்டும். (ஆவேசமாக).




இவ்வாறு கோஷமிடும் இவர்கள் பாண்டியநாட்டின் ஆபத்துதவிகள், பாண்டிய மன்னர்களுக்கு மெய்காப்பாளராக பணியாற்றியவர்கள். வீரபாண்டியனின் மரணத்திற்கு சோழர் குலத்தை பழி தீர்க்க சபதம் பூண்டவர்கள்.




நமது ஒரு பகைவன் காஞ்சியிலும் மற்றொரு பகைவன் இலங்கையிலும் இருக்கின்றனர். நாம் நமக்குள் இரண்டு பிரிவாக பிரிந்து, ஒரு பிரிவினர் தொண்டை மண்டலத்துக்கும், மற்றொரு பிரிவினர் இலங்கைக்கும் சென்று தக்க சமயம் வரும் வரை காத்திருக்க வேண்டும்.
இலங்கைக்கு செல்ல எந்த வழி நல்லது?
கோடிக்கரை வழி!
கோடிக்கரை வழியாக சென்றால் ஆங்காங்கே பகைவர்களும், ஒற்றர்களும் இருப்பார்கள். ஆகையால் சேதுவிற்கு சென்று அங்கிருந்து கடலை கடப்பதே நல்லது.
சரியான யோசனை!
இலங்கை செல்பவருக்கு நீந்தவும், படகு வலிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். உங்களில் யார் யாருக்கு இந்த இரண்டும் தெரியும்?


எனக்கு தெரியும்.
எனக்கு தெரியும்.


இலங்கை செல்பவருக்கு கட்டாயமாக சிங்கள மொழி தெரிந்திருக்க வேண்டும். உங்களில் யாருக்கு தெரியும்?
எனக்கு தெரியும்.
எனக்கு தெரியும்.


ம்... நல்லது, உங்களில் யார் இலங்கைக்கு போவது என்பதை பிறகு முடிவு செய்வோம். அதுமட்டுமில்லை அங்கு போகிறவர்கள் முதலில் இலங்கை மன்னன் மகிந்தனை சந்திக்க வேண்டும். மகிந்தனின் உதவி கொண்டுதான் நாம் நம்முடைய காரியத்தை சாதிக்க முடியும்.


நன்றாக நினைவிருக்கட்டும்! ஏறக்குறைய இரண்டு காரியங்களும் ஒரே சமயத்தில் முடிய வேண்டும். ஒரு பகைவனை முடித்த பிறகு, அவகாசம் கொடுத்தால் இன்னொரு பகைவன் ஜாக்கிரதையாகிவிடுவான். அதற்கு நாம் இடமே கொடுக்கக் கூடாது! புரிகிறதா? (என்று எச்சரித்தான்)
இரும்பன்காரி, நீ சென்ற காரியம் என்னவாயிற்று? ஏதேனும் செய்தி கொண்டு வந்தீரா?
ரவிதாசரே, தாங்கள் கூறியபடியே நான் கடம்பூர் கோட்டையில் காவலனாக பணியாற்றி வந்தேன். அப்போது ஒரு நாள்.....


கடம்பூர் மாளிகையில் இரவு நடந்த நடுநிசிக் கூட்டத்தில் அவன் பார்த்து தெரிந்து கொண்ட விவரங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் ரவிதாசனிடம் கூறுகிறான், இடும்பன்காரி.
கண்டராதித்தரின் மகன் மதுராந்தகன் பட்டத்துக்கு வருவது முறையா? இல்லை, அரிஞ்சயரின் பேரனும் சுந்தர சோழரின் மகனுமான, கரிகாலன் பட்டத்துக்கு வருவது முறையா?
உங்கள் அனைவரையும் சந்தித்ததில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.
கண்டராதித்தரின் புதல்வரே! சிவபக்த சிரோன் மணியே!
மதுராந்தக தேவர் வாழ்க!
வருங்கால சக்ரவர்த்தி மதுராந்தக தேவருக்கு உடல், பொருள், ஆவி அனைத்தும் தத்தம் செய்து நியாயத்தை நிலைநாட்டுவோம்!


அவன் கூறிய அனைத்து நிகழ்வுகளையும் கேட்டறிந்த ரவிதாசன்,
சபாஷ் இடும்பன்காரி! மிக முக்கியமான செய்தியை கொண்டு வந்திருக்கிறீர். சோழ சாம்ராஜியத்திற்குள்ளேயே இம்மாதிரி ஒரு அரசியல் குழப்பம் ஏற்படுவது நம்முடைய நோக்கத்திற்கு உகந்தது, எது நடந்தாலும் நம்மை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் அல்லவா? ம்... வேறு ஏதும் செய்தி இருக்கிறதா?
இருக்கிறது! அங்கு காஞ்சியில் இருந்து கந்தமாறனின் நண்பன் என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்திருந்தான், அவனும் அந்த நடுநிசிக் கூட்டத்தை இரகசியமாக கவனித்துக் கொண்டிருந்தான்.
காஞ்சியிலிருந்தா...!